உ

சிவமயம்



தனங்கிளப்பு, சாவகச்சேரியைச் சேர்ந்த

# அமரர் வயிரமுத்து சின்னப்பா

(ஓய்வுபெற்ற அதிபர்)

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# சின்னப்பா மாலை

2015

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



மறவன்புலோவை பிறப்பிடமாகவும், தனங்கிளப்பை வதிவிடமாகவும் கொண்ட

# வயிரமுத்து சின்னப்பா

அவர்களின் பொன்னுலகப் பயணம் குறித்த

# சின்னப்பா மாலை

26-09-2015



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

தந்தையே எம்மை எல்லாம்
ஆளாக்கி வைத்து விட்டு
மின்னெனப் பறந்து சென்ற
வேதனை சுமந்து நின்றோம்
என்னென்ன சுகங்கள் தேவை
என்பதை அறிந்து செய்து
மன்னவர் போலே எம்மை
வளமுடன் வாழ வைத்தீர்!
ஓங்கிய புகழி னோடும்
உயரிய சிறப்பி னோடும்
தேங்கிய செல்வத்தோடும்
சீரிய கல்வி யோடும்
நாங்களிங் குயரு மாறு
நாளெல்லாம் அருகில் நின்று
தாங்கிய உமக்கே அப்பா
சமர்ப்பணம் இந்த நூலே.

நிரந்தர முகவரி:
தனங்கிளப்பு
சாவகச்சேரி,
**இலங்கை.**

குடும்பத்தினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

அமரர்

# வயிரமுத்து சின்னப்பா



மண்மகிழ
26.01.1938

கண்நெகிழ
26.08.2015

## திதி நிர்ணயம்

ஆண்டுநன் மன்மதமா மாவணி இருபானா
நீண்டுபுகழ் பூர்வபக்க ஏகாதசி - நீண்டுயர்ந்த
பாவேந்தர் எங்கள் வயிரமுத்து சின்னப்பா
மாவேந்தர் தாளடைந்த நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ

# தோத்திரப்பாடல்கள்

## விநாயகர் துதி

திருச்சிற்றம்பலம்

திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் - உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலால் கூப்புவர்தம் கை.

## தேவாரம்

ஆடினாய் நறுநெய்யொடு பால் தயிரந்தணர் பிரியாத சிற்றம்பலம்
நாடிணாயிடமா நறுங் கொன்றை நயந்தவனே
பாடினாய் மறையோடு பல்கீதமும் பல்சடைப் பனி காலகதிர் வெண்டிங்கள்
சூடினாயருளாய் சுருங்கவெ தொல்வினையே.

## திருவாசகம்

பாரொடு விண்ணாய்ப் பரந்தஎம் பரனே
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய் சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
யாரொடு நோகேன் ஆர்க்கெடுத் துரைக்கேன்
ஆண்டநீ யருளிலை யானால்
வார்கடல் உலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருகஎன் றருள்புரி யாயே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

நையாத மனத்தினனை நைவிப்பான் தெருவே
ஐயா நீஉலாப் போந்த அன்று முதல் இன்று வரை
கையாரத் தொழுதருவி கண்ணாரச் சொரிந்தாலும்
செய்யாயோ வருள் கோடைத் திரை லோக்கிய சுந்தரனே.

## திருப்பல்லாண்டு

மன்னுக தில்லை வளர்கநம் பக்தர்கள் வஞ்சகர் போயகல
பொன்னின் செய் மண்டபத்துள்ளே புகுந்து புவனியெல்லாம்விளங்க
அன்னநடை மடவாள் உமைகோன் அடியோ முக்கருள் புரிந்து
பின்னைப் பிறவி அறுக்க நெறிதந்த பித்தற்குப் பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

என்றும் இன்பம் பெருகும் இயல்பினால்
ஒன்று காதலித் துள்ளமும் ஓங்கிட
மன்று ளாரடி யாரவர் வான்புகழ்
நின்ற தெங்கும் நிலவி உலகெலாம்.

## திருப்புகழ்

உம்பர்தருத் தேனுமணிக் - கசிவாகி
ஒன்கடலிற் றேனமுதத் - துணர்வூறி
இன்பரசத்தேன் பருகிப் - பலகாலும்
என்றனுயிர்க் காதரவுற் - றருள்வாயே
தம்பிதனைக் காகவனத் - தணைவோனே
தந்தைவலத் தாலருள்கைக் - கனியோனே
அன்பர்தமக் கானநிலைப் - பொருளோனே
ஐந்துகரத் தானைமுகப் - பெருமாளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள்சைவ நீதிவிளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்

## பட்டனத்தார் பாடல்

என் செயலாவது யாதொன்றும் இல்லை இனித்தெய்வமே
உன்செயலே என்று உணரப்பெற்றேன் இந்த ஊனெடுத்த
பின்செய்த தீவினை யாதொன்றுமில்லை பிறப்பதற்கு
முன்செய்த தீவினையோ இங்ஙனமே வந்து மூண்டதுவே.

வீடிருக்கத் தாயிருக்க வேண்டும் மனையாள் இருக்க
பீடிருக்க ஊன்இருக்கப் பிள்ளைகளும் தாமிருக்க
மாடிருக்க கன்றிருக்க வைத்தபொருள் இருக்கக்
கூடியிருக்கு நீ போனகோலமென்ன கோலமே.

பிறவாதிருக்க வரம்பெறல் வேண்டும் பிறந்துவிட்டால்
இறவாதிருக்க மருந்திருக்கு காண் இது எப்படியோ
அறமார் புகழ்தில்லை அம்பலவாணர் அடிக்கமலம்
மறவா திருமனமே! அதுகாண்நல் மருந்துனக்கே.

சொல்லால் வருங்குற்றம் சிந்தனையால் வருந்தோம் செய்த
பொல்லாத தீவினை பார்வையில் பாவங்கள் புண்ணியநூல்
அல்லாத கேள்வியைக் கேட்டிடும் திங்குகள் ஆயவும் மற்று
எல்லாப் பிழையும் பொறுத்தருள்வாய் கச்சி ஏகம்பனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குலதெய்வத்தின் அருள் வேண்டல்

## தனங்கிளப்பூர் மதாவிற்பதி வைரவர் பதிகம் (108 போற்றி)

### காப்பு

மாமருதம் ஓங்கும் மதாவிற் திருப்பதியில்
சேமமுற வைக்கும் திறல்வடுகோன் - நாமமதில்
சுந்தரமாய்ப் பாடித் துதிசெய்ய ஐங்கரனே
தந்தருள்வாய் நல்ல தமிழ்.

1. முத்தனே கருணை பொழி முதல்வா போற்றி
முடுவல்மிசை வருபவனே போற்றி போற்றி
வித்தகனே அருள்வடிவே போற்றி போற்றி
மிகுவளஞ்சேர் தனங்கிளப்பூர் விகிர்தா போற்றி
சித்தன்உரு வானவனே போற்றி போற்றி
சிரங்குவிப்பார் துணையான தேவே போற்றி
மத்தகத்தை வைத்ததிருக் கரத்தாய் போற்றி
மதாவிற்பதி வயிரவரே போற்றி போற்றி

(முத்தன் - வயிரவர், முடுவல் - நாய், வித்தகன் - வயிரவர், விகிர்தன் - கடவுள், சித்தன் - சிவன், மத்தகம் - தலை)

2. கருநாயிற் பவனிவரும் காரீ போற்றி
கயமுகற்கும் அறுமுகற்கும் இளையாய் போற்றி
திருவாரும் தனங்கிளப்பூர்ச் செல்வா போற்றி
சிவன்வடிவாய் எழுந்தருளும் தேவே போற்றி
அருகாரும் காளியுடன் அமர்ந்தாய் போற்றி
ஆதரிப்பார் தமதுவினை அழிப்பாய் போற்றி
வருவார்க்கு வினையகற்றும் மருந்தே போற்றி
மதாவிற்பதி வைரவரே போற்றி போற்றி

(காரி - வைரவர், கயமுகன் - விநாயகர், அறுமுகன் - முருகன்)

3. பிள்ளைஎனும் திருநாமப் பெம்மான் போற்றி
பேசரிய மிகவலிமைப் போற்றி
பள்ளவயற் தனங்கிளப்பைப் பரிந்தாய் போற்றி
பரவுபர் தமதுவினை பறிப்பாய் போற்றி
வெள்ளைமதி சூடி வினனே போற்றி
வித்தகனே சற்குருவே போற்றி போற்றி
மள்ளலுறு மருதின் கீழ் வளர்வாய் போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதாவிற்பதி வைரவரே போற்றி போற்றி
(பிள்ளை - வயிரவர், பரிதல் - விரும்புதல், பரவுதல் - துதித்தல், வித்தகன் - வைரவர், மள்ளல் - வலிமை, வெள்ளைமதிசூடி - சிவன்)

4. பிரமன்தன் சிரமரிந்த பெரியோய் போற்றி
பெண்ணுருவோ டாணுயிராய் நின்றாய் போற்றி
வருமன்பர் துயர்தீர்க்கும் வடுகா போற்றி
வளந்திருகளும் தனங்கிளப்பூர் வளர்வாய் போற்றி
அரனுருவாய் அமைந்தவனே போற்றி போற்றி
அருமறையைக் கருநாயாய் அமைத்தாய் போற்றி
வரமருளும் திருக்கரத்தாய் போற்றி போற்றி
மதாவிற்பதி வைரவரே போற்றி போற்றி
(அரன் - சிவன், அருமறை - அரியவேதம்)

5. குமரனெனும் அருமருந்தே போற்றி போற்றி
கோதற்றி எமையாளும் குருவே போற்றி
சமதர்ம சகவாழ்வு தருவாய் போற்றி
தனங்கிளப்பூர் உறைபவனே போற்றி போற்றி
நமனச்சம் தவிர்த்தருளும் போற்றி போற்றி
நக்கனுரு வானவனே போற்றி போற்றி
மமகாரம் தனையடக்கும் மருந்தே போற்றி
மதாவிற்பதி வைரவரே போற்றி போற்றி
(குமரன் - வயிரவர், நக்கன் - சிவன், மமகாரம் - கர்வம், அகந்தை, கோது - குற்றம்)

6. திண்ணமுறு திரிசூலப் படையாய் போற்றி
சேத்திரபா லாபொற்றி தீராபோற்றி
தண்வயல்சூழ் தனங்கிளப்பூர்த் தலைவா போற்றி
சஞ்சலந்தீர்த் தெமையாளும் தக்கோய் போற்றி
கண்ணுதலோன் திருவுருவே போற்றி போற்றி
காளியொரு பாகமுடைக் கடவுள் போற்றி போற்றி
வண்ணமலர்த் திருக்குளத்தாய் போற்றி போற்றி
மதாவிற்பதி வைரவரே போற்றி போற்றி
(திண்ணம் - வலிமை, சேத்திரபாலன் - வைரவர், சஞ்சலம் - துன்பம், கண்ணுதலோன் - சிவன்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. கருவுருவாய் வந்தருளும் காரீ போற்றி
காளியொடும் ஒன்றாகி நின்றாய் போற்றி
பெருவயலார் தனங்கிளப்பூர் பெம்மான் போற்றி
பிஞ்ஞகனார் வடிவான பெருமாள் போற்றி
அருநோய்க்குத் திருமருந்தே போற்றி போற்றி
அடியவரைப் பிணித்தருளும் அன்பே போற்றி
மருவுமணி மருதின்கீழ் வளர்வாய் போற்றி
மதாவிற்பதி வைரவரே போற்றி போற்றி

8. கண்ணுதலார் தண்கருணைக்கடலே போற்றி
கருநாயில் வருபவரே போற்றி போற்றி
மண்வளஞ்சேர் தனங்கிளப்பில் வளர்வாய் போற்றி
மருதமரத் திருத்தலத்தாய் போற்றி போற்றி
அண்ணல்சிவ வடிவான ஐயா போற்றி
அருவினை நோய் தீர்த்தருளும் அம்மான் போற்ற
வண்ணமுறு மலர்க்கயத்தின் மருங்காய் போற்றி
மதாவிற்பதி வைரவரே போற்றி போற்றி

(கண்நுதல் ஆர் - நெற்றிக்கண், பொருந்திய, அம்மான் - கடவுள், கயம், - குளம், மருங்கு - பக்கம்)

9. செய்யதிருச் சடையுடையாய் போற்றி போற்றி
திருநான்கு கரதலத்தாய் போற்றி போற்றி
உய்யவழி சமைத்தருளும் ஒருவா போற்றி
உவந்தெழிலார் தனங்கிளப்பூர் உறைவாய் போற்றி
கொய்தயனின் சிரமெடுத்த கோவே போற்றி
கூத்துகந்தான் வடிவினனே போற்றி போற்றி
வையமெல்லாம் காத்தருளும் வடுகா போற்றி
மதாவிற்பதி வைரவரே போற்றி போற்றி

(செய்ய - சிறந்த, சிவந்த, அயன் - பிரமன், கூத்துகந்தான், சிவன், வடுகன் - வைரவன்)

10. பேறாய பேறெல்லாம் அருள்வாய் போற்றி
பேதமின்றிப் பிஞ்ஞகனாய் நின்றாய் போற்றி
நீறாகி நெருப்பாகி நிலைத்தாய் போற்றி
நிகரில்வளத் தனங்கிளப்பூர் நிறைந்தாய் போற்றி
ஈறாகி முதல்நடுவாய் எழுந்தாய் போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாமும் நீயாகி இருந்தாய் போற்றி
மாறாத பேரின்பம் அருள்வாய் போற்றி
மதாவிற்பதி வைரவரே போற்றி போற்றி
(பேதம் - வேறுபாடு, பிஞ்ஞகன் - சிவன்)

## சிவாம்சமே வைரவர் என்பதைத் தெளிவுபடுத்தும், அப்பர் சுவாமிகளின் திருத்தாண்டகங்கள் சில

மூவாதி யாவர்க்கும் மூத்தான் தன்னை
முடியாதே முதல் நடுவு முடிவானானைத்
தேவாதி தேவர்க்கும் தேவன் தன்னைத்
திசைமுகன்தன் சிரமொன்று சிதைத்தான் தன்னை
ஆவாத அடலேறொன் றுடையான் தன்னை
அடியேற்கு நினைதோறும் அண்ணிக் கின்ற
நாவானை நாவினில்நல் லுரையா னானை
நாரையூர் நன்னகரிற் கண்டேன் நானே.

திறம்பலவும் வழிகாட்டிச் செய்கை காட்டிச்
சிறியையாய்ப் பெரியையாய் நின்ற நாளோ,
மறம்பலவு முடையாரை மயக்கம் தீர்த்து
மாமுனிவர்க் கருள்செய்தங் கிருந்த நாளோ
பிறங்கிசீர்ப் பிரமன்தன் தலைகை யேந்தி
அறம்பலவும் உரைப்பதற்கு முன்னோ பின்னோ
அணியாரூர் கோயிலாக் கொண்ட நாளே.

பிரமன்தன் சிரமரிந்த பெரியோய் போற்றி
பெண்ணுருவோ டாணுருவாய் நின்றாய் போற்றி
கரநான்கும் முக்கண்ணும் உடையாய் போற்றி
காதலிப்பார்க் காற்ற எளியாய் போற்றி
அருமந்த தேவர்க் கரசே போற்றி
அன்றரக்கன் ஐநான்கு தோளுந் தாளுந்
சிரம் நெரித்த சேவடியாய் போற்றி போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி

x———x



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவுத் துளிகள்

மறவன் புலவுக் கிராமத்தில் பிறந்து தனங்கிளப்பில் வாழ்ந்து 26.08.2015-ல் சிவபதமடைந்த வயிரமுத்து சின்னப்பா அவர்கள் தென்மராட்சியில் பலராலும் மதிக்கப்படும் ஒருவராவார். இவர் ஆசிரியராக, அதிபராக கடமையாற்றி கல்விப் புலத்தில் எல்லோரினதும் நன்மதிப்பைப் பெற்றிருந்தார். எல்லோரிடத்திலும் அன்பாகவும், பண்பாகவும், அளவோடு பழகும் சுபாவம் படைத்தவர். அமைதியாகவும் அடக்கமாகவும், வார்த்தைகளை மிகவும் கவனமாகவும் பயன்படுத்தும் ஒருவர் இவர்.

இவர் ஒரு சிறந்த கவிஞர் தமிழ் ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் பாண்டித்தியம் பெற்று, கவிதைகள் இருமொழிகளிலும் ஆக்கி பலரின் மதிப்பைப் பெற்றிருந்தார். பத்திரிகைகளில் இவரது கவிதைகள் அடிக்கடி பிரசுரிக்கப்படும் பல போட்டிகளிலும் இவர் பங்கு பற்றுவது இவருக்கு ஒருபொழுது போக்காகும்.

அமரர் சின்னப்பா அவர்கள் நிறைவான வாழ்க்கை வாழ்ந்து சிவபதம் அடைந்துள்ளார். குறையேதும் இல்லாமல் இறுதிவரை வாழ்ந்துள்ளார். நல்ல பிள்ளைகளைப்பெற்றுள்ளார். நல்ல மருமக்கள், பேரப்பிள்ளைகள் அவருக்கு கிடைத்துள்ளனர். தனது மனைவியின் அண்மைக்கால பிரிவின் பின்னர், தனது வாழ்நாளை தனிமையில் இருந்து எழுதுவதிலும், வாசிப்பதிலும், உரையாடுவதிலுமாக மகிழ்ச்சியாக இருந்த வேளை, எதிர்பாராத மரணம் ஏற்பட்டது. எல்லோருக்கும் பேரதிர்ச்சியாக உள்ளது. என்று கூறினால் அது மிகையாகாது. இந்தக் கவலையைப் போக்குவதற்கு இறைவன் அவரது குடும்பத்தினருக்கும் ஏனையோருக்கும் அருள் புரியவேண்டும். நற்பணி புரிந்தவர்கள் மரணிப்பதில்லை வாழ்க அமரரின் நாமம்.

சுபம்

இ. கயிலைநாதன்
ஓய்வுநிலை அதிபர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## படைப்பாற்றல் மிக்க இலக்கியவாதியாக சின்னப்பா வாத்தியார்

பல்துறை வித்தகர்களாக புலமையாளர்களாக பிரதேசத்தின் கலாசார அடையாளமாக கிராமங்கள் தோறும் பெயர்பெற்று விளங்கிய உபாத்தியார்களால் சட்டம்பியார்களால் செழுமைபெற்று உயர்ந்தது யாழ்ப்பாண கல்வி மரபு. ஆசிரியத்துவத்தின் முன்மாதிரியாக திகழ்ந்த இத்தகையவர்களின் ஒருவராக தென்மராட்சியின் தனங்கிளப்பு பகுதியில் வாழ்ந்தவர் அமரர் சின்னப்பா வாத்தியார்.

மறவன்புலவு சகலகலாவல்லியின் ஆரம்பக்கல்வியும், அக்காலத்தில் கல்வி தரத்திலும் ஆங்கிலமொழிமூலக் கல்வியிலும் உன்னதநிலைபெற்று திகழ்ந்த றிபேக் கல்லூரியின் இடைநிலைக் கல்வியும் பின்னாளில் அமரரின் தமிழ் மற்றும் ஆங்கிலப் புலமைக்கு அடித்தளமாக அமைந்தது. திருமணம் செய்து கடைசிமகவுக்கும் தந்தையான பின் தனது முப்பதாவது வயதில் ஆசிரியதொழிலில் இணைந்து கொண்ட சாதாரண சின்னப்பாவை பெரிய பாவாணனாக செதுக்கிய பெருமை ஆசிரிய கலாசாலையையே சாரும். அன்றைய ஆசிரிய கலாசாலைகளின் உயர்தரத்தின் மேலுமொரு சான்றாக வாழ்ந்தவர் அமரர் சின்னப்பா வாத்தியார்.

அமரர் சின்னப்பாவின் தேடலும் ஆர்வமும் யாப்பிலக்கணம், சங்க இலக்கியம், நவீன இலக்கியவடிவங்கள், ஆங்கிலம் சிங்களம் என பல துறைகளிலும் அவரின் பாண்டித்தியத்தை விரிவடையசெய்தது. கற்றலின் வெளிப்பாடாக மரபுக்கவிதை, சிறுகதை, கட்டுரை, சிறுவர்இலக்கியம் என தனது ஆக்கங்கள் மூலம் நல்லவாசகர் மத்தியில் தன்னை நிலைநிறுத்தி கொண்டதுடன் போட்டிகளில் பங்குபற்றி பரிசில்கள் பலவற்றையும் பெற்றுக்கொண்டார். அதிபர் சேவையில் முதலாம் தரத்தில் உயர்வடைந்து தனங்கிளப்பு அ.த.க. பாடசாலையில் இறுதியாக சேவையாற்றி ஓய்வுபெற்றாலும் வாழ்வின் பிற்பகுதியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கொண்ட முயற்சிகளே படைப்பாற்றல்மிக்க இலக்கியவாதியாக சமூகத்தின் ஆளுமை கொண்ட புலமையாளனாக அமரர் சின்னப்பாவை முன்நிறுத்துகின்றன.

யாழ்குடா நாட்டின் தென்னகத்தில் மருதநிலமும் நெய்தல் நிலமும் கலந்த இயற்கை வளமிக்க ஊர்களில் தோன்றிய பண்டிதமணி கணபதிப்பிள்ளை, நாவற்குழியூர் நடராசன், நாவற்குழி பண்டிதர் சு. வேலுப்பிள்ளை, மறவன்புலவு சச்சிதானந்தன் வரிசையில் வைத்து நோக்கத்தக்கவகையில் தனங்கிளப்பு சின்னப்பாவின் இலக்கிய முயற்சிகளும் புலமையும் காணப்பட்டது. ஆயினும் ஞானம் சஞ்சிகையின் வாசகர் வட்டம் தெரிந்து கொண்ட அளவில் புலவர் சின்னப்பாவை சுற்றத்தாரும், அயலவரும், தென்மராட்சியின் கல்வியாளரும் தெரிந்து கொள்ளவுமில்லை தெரிந்துகொள்ள விரும்பவுமில்லை என்பது கவலையைத்தருகின்றது. எனினும் சின்னப்பாவின் இலக்கிய முயற்சிகள் என்ற தலைப்பில் முதுகலைமானிக்கான ஆய்வு தனங்கிளப்பை சேர்ந்த ஆசிரியரால் (விக்னேஸ்வரன் - இராமநாதன் கல்லூரி மருதனார்மடம்) மேற்கொள்ளப்பட்டமை ஒரு நல்ல செய்தியாகும்.

ஒரு நிலத்தின் வரலாறும் பெருமையும் அந் நிலத்தில் வாழ்ந்த மாந்தரின் பெருமையையும் வரலாற்றையும் சார்ந்தது. எனவே தமிழையும் தமிழ்மண்ணையும் நேசிக்கும் இலக்கிய ஆர்வலர்கள் அமரர் சின்னப்பாவின் ஆக்கங்களை பாதுகாத்து தொகுத்து அச்சேற்ற வேண்டும். மேலும் அவற்றை ஆய்வுக்குட்படுத்தி சின்னப்பா வாத்தியாரின் படைப்பாற்றலை வெளிப்படுத்த முன்வரவேண்டும்.

ந.சர்வேஸ்வரன்
அதிபர்
யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறைந்தும் மறையாத பெரியவர்

**அமரர் வயிரமுத்து சின்னப்பா** அவர்கள் ஏழு பாடசாலையில் ஆசிரியராகவும் மூன்று பாடலையில் அதிபராக நற் பணியாற் றினாலும் திரு. சின்னப்பா அவர்களை நான் ஒரு நல்ல விவசாயியாக, மண்ணின் மீது அளப்பரிய பாசமுள்ள பெரியவராக, ஏழைப்பங்காளனாக பன்மொழிப் புலமையுள்ளவராக, எல்லாவற்றிக்கும் மேலாக பொதுச்சேவைகளில் தன்னை அர்ப்பணித்த உத்தமனாக நான் நன்கு அறிவேன். தென்மராட்சிப் பகுதியில் கொடிய யுத்தம் காரணமாக முதன் முதலில் தனங்கிளப்பு மக்கள் இடம் பெயர்ந்தபோது திரு. சின்னப்பா அவர்களின் குடும்பம் எனது வீட்டுக்கு சமீபமாக தங்கியிருந்தமை அவருடன் நன்கு பழகும் வாய்ப்பை எனக்கு ஏற்படுத்தியிருந்தது. திரு. சின்னப்பா அவர்களின் இல்லம் தேடி வயது வேறுபாடின்றி மாணவர்கள் தமக்கு தமிழ், ஆங்கில மொழிகளிலுள்ள சந்தேகங்களை தீர்க்க அடிக்கடி செல்வதை அவதானித்துள்ளேன். நான் கேள்விப் பட்டவர்களில் யாழ்குடாநாட்டடில் தமிழ், ஆங்கிலம் ஆகிய இரண்டு மொழிகளிலும் சம புலமையுள்ள விரல் விட்டு எண்ணக்கூடிய அறிஞர்களில் அமரர் சின்னப்பா அவர்களும் ஒருவராக திகழ்ந்தமையானது தென்மராட்சி மக்களாகிய எமக்கு பெருமை சேர்க்கக்கூடிய ஒரு விடயமாகும். 2000-ம் ஆண்டில் தென்மராட்சி மக்கள் இடம் பெயர்ந்து சொல்லொணா துயர் வாழ்க்கையை அனுபவித்து மக்கள் 2002-ம் ஆண்டு மீண்டும் தென்மராட்சிக்கு குடியேற ஆர்வம் கொண்டபோது "தென்மராட்சி மக்கள் நலன் சேவைகள் சங்கம்" என்ற அமைப்பு மக்களால் தாபிக்கப்பட்டு அவ்வமைப்பில் திரு. சின்னப்பா அவர்கள் முக்கியமானதொரு பதவியில் அமர்த்தப்பட்டார். இந்த சங்கத்தின் செயற்பாடுகளுக்கு **திரு. சின்னப்பா** அவர்களது பணி நல்ல தொரு பலத்தை வழங்கியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் பொதுப்பேறாக தென்மராட்சி மக்கள் படிப்படியாக தமது பகுதிகளில் மீள குடியேற ஆரம்பித்தார்கள். மீள்குடியேற அனுமதி கிடைத்த போதிலும் சில பகுதிக்களுக்கான அனுமதி கிடைப்பதில் தேக்கநிலை காணப்பட்டது. தனக்கிளப்பு பகுதிக்குரிய அமைதியிலும் இந்த நிலை காணப்பட்டதால் தனங்கிளப்பு பகுதி மீள் குடியேற்ற நடவடிக்கையில் திரு. சின்னப்பா அவர்கள் மிக மிக அர்ப்பணிப்போடு செயற்பட்டார். அக்கால பாதுகாப்பு செயலாளருடன் மிகப்பெரியதொரு கலந்துரையாடலை சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் ஏற்பாடு செய்து தனங்கிளப்பு மக்களில் மீள் பிரவேசத்திற்கு வழிசமைப்பதில் பெருவெற்றி கண்டார். திரு. சின்னப்பா அன்னாரின் இப்பணியானது தனங்கிளப்பு பிரதேச மக்களால் என்றும் நினைவில் கொண்டிருக்க வேண்டிய தொரு விடயமாகும். திரு. சின்னப்பா அவர்கள் திடீரென எம்மை விட்டுப்பிரிந்தாலும் அன்னார் மாணவர்களுக்கும், மக்களுக்கும் ஆற்றிய உயரிய உத்தமமான சேவைகளால் திரு. வயிரமுத்து சின்னப்பா அவர்கள் நினைவுகள் என்றும் எம்மை பற்றியிருக்குமென்பது திண்ணம் அமரர் வயிரமுத்து சின்னப்பா அவர்கள் மறைந்தும் மறையாத பெரியவர்கள் நிரலில் இடம் பெற்றுவிட்டார்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றேன்.

**18.09.2015**

**யோகேஸ்வரன் ஜெயக்குமார்**
**தாமோதரம்பிள்ளை வீதி,**
**சாவகச்சேரி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் அதிபர் வ. சின்னப்பா அவர்களின் நினைவலைகள்

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"

ஒருவன் நேற்று இருந்தான் இன்று இல்லை என்று சொல்லும் இரக்கத்திற்கு நிலையை உடையது இவ்வுலகம்.

**அமரர் வயிரமுத்து சின்னப்பா** அதிபர் மறவன் புலோவில் பிறந்து, தனங்கிளப்பை வாழ்விடமாக்கியவர் 77 வருடங்கள் நல்ல வாழ்வை வாழ்ந்து காட்டியுள்ளார். படிப்படியாக உயர்ந்த பதவி நிலைகளை அடைந்துள்ளார். ஓய்வுபெற்ற பின்னரும் ஓய்வென்று இருக்காது தனது எழுத்தாற்றலை விடவில்லை. தமிழ்மொழியில் எவ்வளவு புலமையை பெற்றிருந்தாரோ அதே போல் ஆங்கிலப்புலமையும் கொண்டிருந்தார். கற்றல் கற்பித்தல் நிர்வாகத்தில் திறமையைக் கொண்டிருந்த சின்னப்பா அவர்கள் இறுதி வரை கல்வித்தொண்டைச் செய்தபடி இருந்தார். ஓய்வூதியரான பின்னரும் கவிதை, சிறுகதை, கட்டுரைகளைத் தமிழிலும், ஆங்கிலத்திலும் எழுதியுள்ளார். இவை பத்திரிகைகளிலும் வந்துள்ளன.

தென்மராட்சி கலை இலக்கிய துறையினர் நடாத்திய போட்டிகளில் பங்கு பற்றி பரிசில்களையும் பாராட்டையும் பெற்றிருந்தார். இவருடைய எழுத்தாக்கங்களை இவரது மாணவர் ஒருவர் கல்வி எழுதுமாணிக்கற்கைக்கு ஆய்வுக்கட்டுரை எழுதியமை மெச்சத்தக்கது. சிறந்த ஒரு விவசாயி தனங்கிளப்பு வயல் வெளியில் மாதாவின் வைரவசுவாமி கோவில் இடப்பெயர்வில் பழுதடைந்திருந்த கோவிலை தனது செலவில் புனரமைத்து வைத்தார்.

சைவமும் தமிழும் வளர்த்த இலக்கிய கலாநிதி, பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களின் ஊரையே வாழ்விடமாகக் கொண்டவர். அவரை பின்பற்றி அவருக்கும் பெருமை சேர்த்தார். தொண்ணூறுகளில் இடம்பெயர்ந்த மறவன்புலோ தனங்கிளப்பு மக்கள் மீள்குடியேறி வாழ அரும்பாடுபட்டார். பாதுகாப்பு படையினருடன் ஆங்கிலப்புலமையால் மக்களின் இடர் களைய பாடுபட்டு உழைத்து வழிகாட்டினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரது பிள்ளைகளும், மருமக்களும் கல்வி கேள்விகளின் சிறந்து விளங்குகின்றனர். இவர் பதவியை ஒரு மகன் தனது இறுதிக்காலத்தில் தனங்கிளப்பில் ஆச்சிரம வாழ்வை வாழ்ந்தார். உண்மைத்தியானம் என்றால் என்ன என்பதை நாம் நோக்கில் தியானத்தின் குறிக்கோள் சக்தி சேமிப்பு தான்.

நல்லாரோக்கியமும் பொருளாதாரபாதுகாப்பும் மன அமைதிக்கு மிகவும் இன்றியமையாதவை என்பதை எல்லோரும் அறிவார். மனித வாழ்வு மிகவும் சுருங்கியது. இக்காலத்துள் நமக்கும் பிறருக்கும் நல்லதை செய்து வைக்க சின்னப்பா அதிபர் தவறவில்லை.

அமரர் சின்னப்பா அவர்கள் பழமைக்கும் புதுமைக்கும் பாலமாக அமைந்தார். தான் சார்ந்த மக்களுக்கும் அமைப்புக்களுக்கும், நல்ல ஆலோசகராகவும் வழிகாட்டியாகவும் வாழ்ந்தார். 26-08-2015 காலையில் நன்றாக கதைத்து நடமாடியவர் கணப்பொழுதில் சில நொடியில் இறையடி சேர்ந்தமை அவரின் புண்ணியப்பலனை அறிய வைத்து திரியம்பக மந்திரமும் தெளிவு படுத்தும் நன்கு பழுத்த வெள்ளரிப்பழம் வெடிக்கும் பொழுது நெட்டிதானாகவே விடுபடுமாம்.

தென்மராட்சி ஓய்வூதியர் நலன்புரிச்சங்கத்தின் நிர்வாக உறுப்பினராக இருந்து “அனுபவ தீபம்” என்ற சஞ்சிகை வெளிவரக் காரணமாக இருந்தவர். நலன்புரிச் சங்கத்தினர் சார்பாகவும் அவரது ஆத்மா சாந்திபெறவும் அவரது குடும்பத்தினருக்கும் எமது ஆறுதலையும் அனுதாபத்தையும் தெரிவிக்கின்றோம்.

அருட்பெரும் ஜோதி தனிப்பெருங்கருணை

ஓம் சாந்தி!

**செ. சுப்பிரமணியம்**
**ஓய்வுநிலை அதிபர், தலைவர்,**
**ஓய்வூதியர் நலன்புரிச்சங்கம்,**
**தென்மராட்சி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "சின்னப் "பா" வாணர்"

- கவிஞர் க. நாகேஸ்வரன் -

சின்னப்பா என்னப் பெயர்கொண்ட
எங்கள் - சின்னப் "பா" வாணர்
பென்னம் பெரிய விரிந்த இதயம்
பெருமையிலும் பணிவு அவர்பெருங்குணம்
வன்னக் கவிதைகளை வடிவார் தமிழிலும்
வடிவார் ஆங்கிலத்திலும் செய்யும் சிறப்பு
தன்னடக்கத்தோடு தனை நிறுவிய மன்னர்
தழலோடு உருகி இன்று தமிழோடு கலந்தாரோ?

*　　　*　　　*

பண்கலந்த பாடல் பல படைத்தளித்த பிரமன்
பண்பாடு பக்தி பற்றுறுதிப் பக்குவத்தார்
மண்ணில் விருட்சமென மகிமை படைத்த வள்ளல்
மற்றோரும் வாழ மனத்தால் துதித்த மகன்
கண்ணிற் கருத்தில் கற்பனையில் கவிதைதனைக்
காதலித்துக் தொழுதமகன் கடுந்தூரம் போனாரோ?
எண்ணில் இதயமெலாம் இரத்தம் வடிகிறதே
இதுதான் விதியோ? இனியவரை மறப்போமா?

*　　　*　　　*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கவிஞர் புகழை வாழ்த்த காரணமெதனைச் சொல்வேன்....?

கற்றவர் பலபே ருண்டு
கவிகளும் புனைய வல்லார்
மற்றவர் வியக்கப் பேசி
மகிழ்தரும் எழுத்தும் செய்வார்
கற்றதை உணர்ந் தடங்கி
கசடற வாழ்ந்து காட்டி
சிந்தனைக் கிளறல் செய்த
சின்னப்பா நினைவு கூட்டும்

தமிழ்மொழிப் பெருமை யெல்லாம்
தண்மையும் உண்மையும் தானும்
அமிழ்தென அதனைச் சொல்லல்
அழிவிலா அறிவுக் காசு
குமிழ்தர இவற்றின் மேன்மை
குலவிடும் கவியால் ஞானம்
சிந்திடச் செய்யு முந்தன்
சின்னப் "பா" நீடு வாழ்க...

கவர்ந்திழு விளைந்த தேகம்
கனிந்திடும் குளிர்ந்த பார்வை
இரும்பிலும் வலிய உள்ளம்
வைரவர் நினைவே காட்டும்
இனியவே செய்யும் எண்ணம்
வையகம் பரந்த நோக்கம்
கரும்பினும் இனிய சொற்கள்
கவிஞர் வடிவ மாகும்.

மும்மொழிக் கவி புனையும்
முறைமையைப் போற்று கேனோ?
செவிமகிழ் இனிய சொல்லின்
செறிவினை மெச்சு கேனோ?
புனைகதை புனைந்து கூறும்
புகழினை மெச்சு வேனோ?
கவிஞரின் புகழை வாழ்த்த
காரண மெதனை சொல்வேன்?

தனங்கிளப்பு,
சாவகச்சேரி.

திரு. தி. விக்னேஸ்வரன்
(யா/இராமநாதன் கல்லூரி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் வயிரமுத்து சின்னப்பா அவர்கள் பதித்த வாழ்க்கை சரித்திரம்...

வேளம் கட்டி வேளாண் செய்து
ஏழ்மை போக்கி ஏக்கம் தவிர்த்து
ஈழம் என்கின்ற இனிய தேசத்து
யாழ் மண் அருகே யாதவம் செய்து
வாழும் ஊராம் தனங்கிளப் பெனும் பதி

நன்னீர்க்குளங்கள் நாலா பக்கமும்
செந்தாமரையும் அல்லியும் ஆம்பலும்
தென்னந் தோப்பும் தெரு இரு மருகிலும்
செந்நெல் வயலும் செறிவுறு பனைகளும்
சின்னக் காடுகள் சிதறிய கடல் என,

முன்னோர் தவவினை மூத்தவன் கணேசன்
முடுவல் மீதமர்ந்த வைரவர், சிவனின்
சின்னப் பிள்ளையாம் வீரபத்திரருடன்
அன்னார் துணைவி அம்பிகை அவள் திருத்
தோற்றம் தழுவிய சக்திகள் பலப்பல,

மாற்றம் விரும்பும் மனிதர்க்கு அவை தர
கூற்றுவன் கொடுமை கொன்றே ஒழிக்க
மாற்றான் கெடுபிடி மறித்தே அடக்கி
ஏற்றம் அறித்து இடர்களைத் தருளும்
மதாவிற் குளப்பதி வைரவர் துணையொடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறத்தமிழன் வாழ் மறவன் புலவெனும்
சிறப்புறு பதியுறை வைரமுத்து அவன்துணை
சின்ன மணியை சீர்கரம் பற்றி
சுப்பிரமணியம் நாகமுத் தொடு
"**சின்னப்பா**" வையும் சேர்த்திங்கு பெற்றனர்.

"**சின்னப்பா**" வினில் சொல்லிடும் சங்கதி
சின்னப்பா வல்ல தமிழ்சிறப்புப்பா பெரும்பா
வெண்பா வித்தகன் தமிழ் வேந்தனைப் பற்றி நான்
என், பாடுவேன் பிறக்கையிலே யாவரும்
**சின்னப்பா**"ப்பா" வென சேர்த்தனர் நாமமே.

சீரிய பண்பும் சிறந்த நெறிமுறையும்
கூரிய புத்தியும் குவலயத்தோர் வாழ
பாரிய பொழுது நல சேவையும்
கல்வியில் சிறந்து கவிதை இலக்கியங்கள்
ஆங்கில மொழியிலும் ஆக்கிய ஆசான்.

ஆசிரியராகி தன் அயரா உழைப்பினால்
அதிபராய் உயர்ந்த தன் இல்லக் கிழத்தியை
தனங் கிளப்பூரினில் தலை சிறந் தோங்கிய
தமிழ்ப் பூசகராம் சின்னையா மகள் தவமணி
தனைக் கரம் பற்றியே தகவுறு வாழ்வினில்,

இல்லறம் என்ப இயல்புடைய மூவர்க்கும்
நல்லறம் என்ப நானிலம் போற்றிட
சொல்லறம் பேணியே சோர்விலா உழைத்திங்கு
சொர்க்கத்தை ஈட்டி சோதியர் இருவரும்
பெற்றவை ஆறெனும் பேறவை எவை எனில்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனந்தராசா நகுலேஸ்வரனோடு
பரமேஸ்வரனோடு புவனேஸ்வரியும்
லோகேஸ்வரனோடு மகேஸ்வரன் தானும்
ஆறும் பிறந்தும் புவனேஸ்வரியோடு
அடுத்த சகோதரமும் அகன்றே போக,

நால்வரும் வளர்ந்து நல்லவை கற்று
நானிலத்தில் வாழ தொழில் துறை பெற்று
காலச் சுழற்சியில் கல்யாணம் ஆகி
ஆனந்தராசா புவனேஸ்வரியையும்
நகுலேஸ்வரனோ புஸ்பராணியையும்,

பரமேஸ்வரனோ கமலராணியையும்
மகேஸ்வரன் முடிவில் லதா தனை இணைத்து
இரண்டாம் தலைமுறை இல்லறம் தொடர்ந்தது
பேரராய் பதினொரு பேரையும் பெற்றவன்
பேரருள் பெற்று பெருவாழ்வு வாழ்ந்தனர்.

எல்லாப் புகழும் எல்லா நலமும்
எல்லாச் செல்வமும் இருந்தும்மென் வாழ்வில்
ஏக்கமும் துயரும் எண்ணிலா இடர்களும்
இவ்வுலக வாழ்வில் எப்போதும் வருதலால்
இறைவனடி சேர எண்ணினார் போலும்,

காண்பவை யாவையும் கவிதையாய் செய்பவர்
கடவுளை நினைந்து அவன் கருணையை எண்ணி
கண்ணில் நீர் மல்கிட காவியங்கள் செய்து
எண்ணி எண்ணி பல இறைபணிகள் செய்து
ஏகன் அநேகனின் இறையடி எய்திட,




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாகங்கள் செய்திந்த யாக்கை வெறும் பொய்யென்று
பாவங்கள் களைந்தந்த பரலோகக் கதவுதனை
யார் வந்து திறப்பரென்று ஆர்வமுடன் காத்திருக்க
காரிருளைக் கிழித்திந்த சூரியனும் விழித்திருக்க
(யா) ருக்கும் சொல்லாமல் ஐயா நீர் போனீரோ,
காயமே பொய்யென்றும் காற்றடைத்த பையென்றும்
வேயாத வீட்டிற்குள் வீழ்வதொல்லாம் துன்பமென்று
ஓயாமல் நீர் உரைக்க பேசாமல் கேட்டிருந்தோம்
சாயாமல் சாய்த்தீரே சாதல் என்றால் கடத்தல் என்று
பேசாமல் நீர் கிடக்க பெருந்துயரில் நாம் துடித்தோம்.

சீரார் பெருஞ்சிவனை சீதேவி அவர் துணையை
சிவலோக தேசத்து சிறப்புக்களை சிறு கவியாய்
ஆர்பாடவேண்டுமென்று அவரே அழைத்தாரோ?
சீரோடு நீர் பாட சிந்தை குளிரும் சிவன்
சீமையிலே சேருமையா சிவன்தாள் துணையெனவே,

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம்சாந்தி!!!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் :

சுடர்த்தொடீஇ! கேளாய், தெருவில்நாம் ஆடும்
மணற்சிற்றில் காலின் சிதையா, அடைச்சிய
கோதை பரிந்து, வரிப்பந்து கொண்டோடி,
நோதக்க செய்யும் சிறுபட்டி, மேலோர்நாள்,
அன்னையும் யானும் இருந்தேமா, இல்லிரே
உண்ணுநீர் வேட்டேன் எனவந்தாற் கன்னை
அடர் பொற் சிரகத்தால் வாக்கிச் சுடரிழாய்
உண்ணுநீர் ஊட்டிவா என்றாளென யானும்
தன்னை அறியாது சென்றேன்மற் றென்னை
வளைமுன்கை பற்றி நலியத் தெருமந்திட்டு
அன்னாய் . இவனொருவன் செய்தது காண் என்றேனா
அன்னை அலறிப் படர்தரத் தன்னை யான்
உண்ணுநீர் விக்கினான் என்றேனா அன்னையும்
தன்னைப் புறம்பழித்து நீவமற் றென்னைக்
கடைக்கண்ணால் கொல்வான் போல் நோக்கி நகைக்கூட்டம்
செய்தானக் கள்வன் மகன்.

இலகு தமிழில் யான் எழுதிய பாட்டு:

ஒளிர் வளையாய் கேளாய்! தெருவில்நாம் விளையாடும்
மணல்வீடு காலால் சிதைத்தும், சூடிய
மாலை அறுத்தும், வரிப்பந்து கொண்டோடியும்
அழவைத்த "அடங்கா மாறி", வேறோர் நாள்
அன்னையும் நானும் இருக்கையில், "வீட்டோரே!
குடிதண்ணீர் தாகம்" எனவந்தான்; அன்னை
மின்னும் பொன் கலத்தில் வார்த்து, ஒளிர் ஆபரணத்தாய்!
உண்ணும் நீர் ஊட்டிவா அவனுக்கு" என நானும்
அவனை அறியாது சென்றேன்; அவன் என்னைக்
காப்பணிந்த கையில் தொட்டிழுக்க, மருண்டு
"அம்மா இவனொருவன் செய்ததைப் பார்" என்றேன்
அம்மா அலறியடித் தோடிவர, அவனை நான்
"குடி தண்ணீர் விக்கினான்" என்று சொல்ல, அன்னையும்
அவனை முதுகில் தடவவே, என்னைக்
கடைக்கண்ணால் கொல்வான்போல் நோக்கிப் புன்னகை
செய்தான் அக் கள்ளப் பயல்.

---

எடுத்துக் கொண்ட இயற்கை எழுதிற்குப் பொருத்தமான யாப்பைத் தெரிவு செய்வது பாநடையைப் பெற்றுத் தரும் என்பது உண்மையே. இதற்காக பழைய கவிதைகளை மட்டும் தான் வாசிக்க வேண்டும் என்பதில்லை. மக்கள் மனங்களைப் பிணிக்கும் மகிழ்ச்சியான கருத்துக்களை மரபுக் கவிதைகளில் எழுதமுடியாது என்று யாரோ சொல்லி வைத்திருக்கிறார்கள். எதையும் எப்படியும் அழகாக அம்பலக்காட்ட, மிகமிகக் கடினமான யாப்பிலக்கண வரம்புக்குட்பட்ட கட்டளைக் கலித்துறையிலே ஒரு காதல். நிகழ்ச்சியை அடுத்துக் காட்டுகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரு. வ. சின்னப்பா அவர்களின் சேவை விபரம்

## ஆசிரியராக 1968 - 1982

| | |
|---|---|
| யா/பல்லவராயன் கட்டு அ.த.க பாடசாலை | 01.11.1968 - 09.01.1973 |
| யா/கொழும்புத்துறை ஆசிரியர் கல்லூரி | 10.01.1973 - 31.12.1974 |
| மன்/சின்னவலயன்கட்டு அ.த.க பாடசாலை | 01.01.1975 - 27.01.1975 |
| மன்/மூன்றுமுறிப்பு அ.த.க பாடசாலை | 28.01.1975 - 31.05.1975 |
| மன்/பாலைக்குழி றோ.க. வித்தியாலயம் | 01.06.1975 - 31.01.1977 |
| மு/சிறாட்டிக்குளம் அ.த.க பாடசாலை | 01.02.1977 - 30.04.1978 |
| மு/உயிலங்குளம் அ.த.க பாடசாலை | 01.05.1978 - 30.06.1983 |

## அதிபராக 1982 - 1998

| | |
|---|---|
| யா/நாவற்காடு கணபதிப்பிள்ளை வித்தியாலயம் | 01.07.1983 - 23.08.1983 |
| யா/மறவன்புலோ சகலகலாவல்லி வித்தியாலயம் | 24.08.1983 - 31.08.1992 |
| யா/தனங்கிளப்பு அ.த.க பாடசாலை | 01.09.1992 - 25.01.1998 |

21.04.1982-ல் அதிபர் தரம் - 3

01.01.1985-ல் அதிபர் தரம் - 2

01.01.1994-ல் அதிபர் தரம் - 1



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வயிரமுத்து சின்னப்பா அவர்களின் ஆக்கங்கள்

வயிரமுத்து சின்னப்பா அவர்களின் உள்ளத்திலிருந்து உருவெடுத்த உணர்வலைகளை சிறுகதையாக தொகுத்துள்ளார் அவை பின்வருமாறு.

யார் இந்தக் கறுப்பாடு (சங்குநாதம்)
அன்னையின் அருமை
நன்றிக்கடன்
மனிதம் எங்கே இருக்கிறது. (சங்குநாதம்)
தினை விதைத்தவன் தினை அறுப்பான் (வலம்புரி)
அறுவடை (வலம்புரி)
இன்று விட்டேன் கொண்டலடி (வலம்புரி)
அப்பா வீடு பாக்க போனார் (ஞானம் சஞ்சிகை)
வெளியிலே வெள்ளை வேட்டி
கைம்மாறு
கெடுவார் கேடு நினையாதே
ஊருக்கல்லோடி உபதேசம்
Who is great?
தண்டனை

## Easy Rhymes in English

The cat my pet (Junior star Thinakkural)
Who is the guide? (Junior star Thinakkural)
My car (Junior star Thinakkural)
Who was the sinner? -(Junior star Thinakkural)
Farmer is the god of the country (Junior star Thinakkural)
A suitable place to hide (Junior star Thinakkural)
Don`t you see the down? (Junior star Thinakkural)
Riddles, Riddles! what are these? (Junior star Thinakkural)
Alittle curve makes many matters straight
Let us forget the past
Let`s flush a white dove (Natioal harmony)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலக்கிய இன்பம்

ஔவைசொல் அமுதம்
சுடர்தொடீஇ கேளாய் – கலித்தொகைக்காட்சி (சங்கு நாதம்)
கவிதையில் கம்பர் கையாண்ட புதுமைகள் (சங்கு நாதம்)
குறுந்தொகை காட்டும் குறிஞ்சி (சங்கு நாதம்)
விகடகவிகள் (சங்கு நாதம்)
நீயும் தாயை இவற்கு – அகநானூற்றில் ஒருகாட்சி
நிந்தாஸ்துதி கவிகள் – காளமேகப்புலவர் (சங்கு நாதம்)
நிந்தாஸ்துதி கவிகள் – அந்தக்கவிவீரராகவர், சொக்கநாதப்புலவர் (சங்கு நாதம்)
கலந்தன கண்கள் இணைந்தனர் இருவர் – கலித்தொகைக் காட்சி (சங்கு நாதம்)
குங்குமம் இடுக கூடி மகிழ்வோம் – ஐங்குறுநூறிலே மங்கையர் சொல்கிறார் (சங்கு நாதம்)
பாடல் ஒன்று பாடியோர் இருவர்
கணவனுக்கு வேறொரு காதலியா – அகநானூற்றில் ஒருகாட்சி (சங்கு நாதம்)
ஒன்றினர் வாழ்க்கையே வாழ்க்கை
கவிதை ஒன்று கவிஞர்கள் இருவர்

## கவிதை ஆக்கம்

தென்மராட்சி போர்க்களமான போது ...... (பிரதேச மலர் – தென்மராட்சி பிரதேசம்)
ஆட்சி அலங்காரம் (ஞானம்)
எந்த நாளோ? (உதயன்)
இருப்பதும் இழப்பதும் (ஞானம்)
நல்லவை நாலாறில் (வலம்புரி)
நிலை நிறுத்தக் கூடாதா அன்புப் பாலம்? (ஞானம் சஞ்சிகை)
புரியவே புரியாது (ஞானம் சஞ்சிகை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செருப்புக் கட்டி சிறப்புக்கட்டி (ஞானம் சஞ்சிகை)
மங்கலமாய் நானழைப்பேன் வா! (ஞானம் சஞ்சிகை)
உலகம் முழுமைக்கும் ஜோசப்பின் செய்தி (ஞானம் சஞ்சிகை)
மனிதன் இன்னும் கற்றுக் கொள்ளாதது (ஞானம் சஞ்சிகை)
எந்த நாளோ அந்த நாளே! (ஞானம் சஞ்சிகை)

**பாடலாக்கம்**

சகத்தினிலே உயர்வோம் பகை ஓட்டி
முயற்சி
ஓய்வூதியர் சங்கக் கீதம்

**நாடகம்**

மாளிகையும் மண்குடிசையும்
தந்தைக்குபதேசம்

## திரு. வயிரமுத்து சின்னப்பா அவர்களால் எழுதி வெளியிடப்பட்ட நூல்கள்

1. தனங்கிளனப்பூர் மதாவிற்குளப்பதி ஞானவைரவர் பஜனை வழிபாடு
2. வரணி சுட்டிபுரத்தம்பாள் ஒருபா ஒருப.்.து (கட்டளைக் கலித்துறை)
3. சாவகச்சேரி - தனங்கிளப்பு கண்ணகை அம்பாள் சரணப் பாடல்கள்
4. தனங்கிளப்பூர் மதாவிற்குளப்பதி வைரவர் பதிகம் (108 போற்றிகள்)
5. நாச்சியார் அம்பாள் பஜனை வழிபாடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிள்ளைகள் புலம்பல்

பெற்றதாய் அவர்போல பேதம் எதுவும் இன்றி
சுற்றிச் சுற்றி வந்து சுகமாகக் காத்தீரே
கற்றவை நிற்க வாழ்வின் கருமங்கள் சிறக்க வைத்த
அற்புத தேவா உந்தன் ஆலயம் வெறுமையாச்சோ
பொற்பாதம் தேடுகின்றோம் போன நீர் திரும்புவீரோ?

ஆடைகள் தோய்த்து உடலை ஆசாரமாக வைத்து
கூடவே நடந்து வந்து குளத்தினில் குளிக்கச் செய்து
பாடங்கள் சொல்லித் தந்து பசிக்கு நீர் சமைத்துத் தந்து
வாடவே விடாது எம்மை வளர்த்ததோர் தெய்வம் இன்று
பாடையில் போக என்ன பாவம் தான் செய்தோ மிங்கு.

## மருமக்கள் புலம்பல்

பெற்றதாய் வீடு விட்டு பெண்ணினம் வேறோர் வீட்டில்
சுற்றமும் சுழல் இன்றி சுதந்திரம் போகுமென்று
கற்பிதம் செய்தோம் எல்லாம் காற்றிலே போனதுங்கள்
பொற்பதம் கண்ட போதெம் பெற்ற தாய் தந்தை கண்டோம்.

மற்றவர் பெற்ற மக்கள் மருமக்கள் என்பதெல்லாம்
மற்றவர் வாழ்வில் உண்டோ மனதிலும் எமக்கு இன்றி
சுற்றமாய் இருந்த மாமா சோகமாய் எம்மைவிட்டு
பற்றிலா உலகம் நீத்தீர் பதறுதே சதுரமைய்யா.

## பேரரின் புலம்பல்

அப்பப்பா எங்களுக்கு அப்பாவுக்கு அப்பாவாக
அறிவினை ஊட்ட வல்ல ஆசானுக் காசானாக
சிறுவிளை யாட்டில் எல்லோரும் சேர்ந்து நீர் ஓடி ஆடி
குறும்புகள் செய்து எம்மை குதூகலம் செய்து போட்டு
உறங்கி நீர் போனீரப்பா உலகமே உறங்கிப் போச்சு சிறகுகள்
உடைந்து போச்சு சிறுவர் நாம் என்ன செய்ய?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உற்றார் உறவினர்கள்

நண்பனாய் நடுநிலை வாதியாய் நமக்கொரு
துன்பமென்றால் ஓடி துயர்களைந்திட வரும்
அன்பனாய் அறிவு சால் ஆசானாய் அண்டினோர்க்கு
ஆதரவாய் ஆர்வருவார் ஐயா நீர் இல்லாமல்
மண்சுமந்த மேனியது மாண்பையும் சுமந்து நிற்க
மண்விழுந்து மாய உடல் மண்ணரித்துப் போனாலும்
கண்ணில் உந்தன் உருவம் எங்கள் காதில் குரல் கேட்குதையா
கைதொடத்தான் முடியவில்லை கதை பேச மொழியுமில்லை

## தேற்றம்

பிறப்பவர் யாவரும் பூமியில் இருந்தால் புதிதாய்
பிறப்பவர்க் கிங்கே இடங்கிடையாது
பிறப்பவர் இறப்பவர் இறப்பவர் பிறப்பர்
இதுவே இயற்கையின் கலைச்சுழற்சியாம்
இன்றிதை எழுதும் எனது வாழ்வும்
என்றைக்கு வரைக்கும் எதுவுமே அறியேன்.

எதுவுமே இங்கு நிரந்தரம் இல்லை
எவர்க்குமே எதுவுமே சொந்தமும் இல்லை
இதுவே நியதி இறைவனே நிரந்தரம்
இறந்தவர் அழுவதால் எழும்பவும் மாட்டார்
சிவனே கதியென சிந்தையை நிறைப்போர்
சிவபதமடைவர் சிவாய நம ஓம்

கவிதையாக்கம்:-
மகன் சின்னப்பா ஆனந்தராசா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னப்பாவின் பிரிவின் போது இரங்கிப்பாடிய ஒப்பாரிப்பாடல்

1. வீடு வெறுப்பாச்சோ என்ரை ஐயா உனக்கு
வெளியிடம் தான் தேனாச்சோ ஓ...
காடு குடியிருப்போ என்ரை ஐயா உனக்குக்
கடலோரம் வாழ்விடமோ - ஓ...

2. மாண்டு மடிந்ததென்ன என்ரை ஐயா நீ
வாழ்விழந்த மாயமென்ன
தூண்டா மணிவிளக்கே என்ரை ஐயா நாங்கள்
துயரமதில் மூழ்கினமே...

3. கோடி பணமிருக்க என்ரை ஐயா உனக்குக்
குடம் குடமாய்ப் பொன்னிருக்க
ஓடி ஒழிஞ்சனையோ என்ரை ஐயா நீ
ஒரு நொடியில் போனாயோ ஓ...

4. பட்டு வேட்டியெல்லாம் என்ரை ஐயா உனக்குப்
பலதிணிசாய் வைச்சிருக்க
தொட்டதெல்லாம் குறையுமென்றோ என்ரை ஐயா நீ
தூரநடை போட்டனையோ ஓ...

5. வாயைத் திறந்தெமக்கு என்ரை ஐயா நீ
வார்த்தை ஒன்று சொல்லாமல்
தூர நடந்துசெல்ல என்ரை ஐயா உனக்குத்
துணிவு பிறந்ததுவோ... ஓ...

6. சொந்த ஊர் சென்று என்ரை ஐயா நீ
சுகநலங்கள் காணமுந்தி
அந்தகன் ஊர்தானோ என்ரை ஐயா உனக்கு
ஆசை ஊர் ஆயினதோ... ஓ...

7. கூடி மகிழ்ந்திருந்து என்ரை ஐயா நீ
குடித்தனங்கள் செய்து விட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடையிலே செல்ல என்ரை ஐயா உனக்குப்
பாழ்வினையும் சூழ்ந்தது வோ?...

8. தூக்கி நிறுத்திவைத்து என்ரை ஐயா உனக்கு
சோறூட்டி வைச்சிருக்க
ஆக்கினைஏன் என்றோ என்ரை ஐயா நீ
அந்தகன் ஊர் சென்றாயோ? ஓ...

9. சேனை சனமிருக்க என்ரை ஐயா உனக்குச்
சேவை செய்ய நாமிருக்க
தன்னந் தனியாக என்ரை ஐயா நீ
தனிவழிக்குப் போனாயோ... ஓ...

10. ஆற வழி இருக்கோ என்ரை ஐயா நாம்
அமைதி கொள்ளும் மார்க்கம் உண்டோ?
தேற வழி இருக்கோ என்ரை ஐயா நாம்
சேர்ந்திருக்க நாள்வருமோ... ஓ...

11. ஓசை ஒடுங்கியதோ என்ரை ஐயா உனது
உருவமும்தான் மாய்ந்ததுவோ..... ஓ...
ஆசைக் கொருவார்த்தை என்ரை ஐயா இனி
ஆரிடம் தான் கேட்பதுவோ... ஓ...

12. துக்கம் பொறுப்போமோ என்ரை ஐயா உன்ரை
சோதிமுகம் காணுமோ... ஓ....
பக்கத் திருந்த உன்னை என்ரை ஐயா இனி
படமாகப் பார்ப்பதுவோ.... ஓ...

13. உண்ண மனம் வருமோ என்ரை ஐயா எமக்கு
உறங்கவிழி மூடுமோ
கண்ணீரில் தானோ என்ரை ஐயா இனிநாம்
காலமெல்லாம் வாழுவதோ... ஓ ...

14. மீண்டு வருவாயோ என்ரை ஐயா எங்கள்
வேதனையைத் தீர்ப்பாயோ
மாண்டு மடிந்தாலும் என்ரை ஐயா எங்களை நீ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தொருக்கால் பாராயோ... ஓ...

15. குலத்தை வளர்த்தெடுத்தாய் என்ரை ஐயா இன்றுனது
கொள்கையினை மாற்றினையோ...ஓ...
நிலத்தில் மிதியாமல் என்ரை ஐயா நீ
நீண்டவழி போனாயோ... ஓ ...

16. பொழுது கருக முந்தி என்ரை ஐயா உன்னுடைய
பொன்முகத்தை காட்டாயோ?
அழுது புலம்புகின்றோம் என்ரை ஐயா எங்களை
அரவணைக்க வாறதெப்போ ... ஓ...

17. ஒண்டாய் இருந்தாய் என்ரை ஐயா நீ
ஒரு கலத்தில் உண்டிருந்தாய்
கொண்டானை (ரை) விட்டுவிட்டு என்ரை ஐயா உனக்குக்
குலைய மனம் வந்ததுவோ? ...ஓ...

18. சோடிழந்த அன்றிலென என்ரை ஐயா எங்களை
துயரமதில் ஆழ்த்திவிட்டு
காடு பெரிசென்று என்ரை ஐயா நீ
காற்றாய் பறந்தனையோ... ஓ ...

19. தொட்ட இடம் துலங்கும் என்ரை ஐயா நீ
துணையிருந்தால் பூமலரும்
பட்ட மரமாக்கி என்ரை ஐயா என்னைப்
பாழ் நரகில் விட்டனையோ ...ஓ...

20. தேயா நிலவாகி என்ரை ஐயா உன்னுடனே
சேர்ந்திருந்து வாழ்ந்தேனே - இப்ப
பேயாய் அலைகிறனே என்ரை ஐயா உன்னைப்
பிரிஞ்சிரிக்க ஊழாச்சோ ...ஓ...

21. தன்னந்தனியாக என்ரை ஐயா என்னை
தனிமையிலே வாடவிட்டு
தென்னன் திருப்பதத்தை என்ரை ஐயா நீ
தேடி நடந்தனையோ ...ஓ...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

22. ஓலம் ஒழிவதெப்போ என்ரை ஐயா எங்கள் வீட்டில்
ஒப்பாரி ஓய்வதெப்போ
கோலம் இடுவதெப்போ என்ரை ஐயா எங்கள் வீட்டில்
குத்துவிளக் கொளிர்வதெப்போ ...ஓ...

23. குணமாலை போலே என்ரை ஐயா எங்களுடன்
கூடி இருந்த உன்னை ஐயோ
பிணமாலை சூட்டி என்ரை ஐயா இன்று
பிரித்தனுப்ப நாளாச்சோ ...ஓ...

24. கொட்டி முழக்குகினம் என்ரை ஐயா உன்னை
கொண்டு செல்லப் போகினமே
பெட்டி படுக்கை எல்லாம் என்ரை ஐயா இனிப்
பேயுடமை ஆவதுவோ ...ஓ...

25. ஊரெல்லாம் போற்றும் என்ரை ஐயா உன்னை
உலகமெல்லாம் பாராட்டும்
சீரெல்லாம் நீக்கிவிட்டு என்ரை ஐயா இன்றுன்னைத்
தீயிலிட நாளாச்சோ...............ஓ.....................

## கோயிலை வலம் வரும் முறையும் பலனும்

3 முறை கோயிலை வலம் வருதல் - விரும்பிய காரியம் நிறைவேறும்
5 முறை கோயிலை வலம் வருதல் - காரிய வெற்றி
7 முறை கோயிலை வலம் வருதல் - நல்லெண்ணம், நற்குணம்
9 முறை கோயிலை வலம் வருதல் - குழந்தைப் பாக்கியம்
15 முறை கோயிலை வலம் வருதல் - செல்வம்
1008 முறை கோயிலை வலம் வருதல் - திருமணம் நடைபெறும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேற்றம்

ஈங்குவந் துதித்தோர் எல்லாம்
இறப்பின்றி இருக்கின் றாரா?
ஏங்குத லாலே ஏதும்
இலாபத்தைக் கண்ட துண்டோ?
நாங்களும் ஓர்நாள் இந்த
நாநிலம் விட்டுச் செல்வோம்
ஈங்கித னாலே வீணே
இறப்பினுக் கேங்க லாமோ?

பிறந்தவர் இறத்தல் திண்ணம்
பேசிடும் பகவத் கீதை
இறந்தவர் பிறத்தல் திண்ணம்
இதையுமே சொன்னான் கண்ணன்
மறந்திதை வாழ லாமோ?
மரித்தவர்க் கேங்க லாமோ?
கறந்தபால் முலைக்கே றாதே
கவலைஏன் உலகத் தீரே?

தூங்கியே கிடத்தல் போலத்
தொடர்ந்திடும் இறப்புத் தூக்கம்
நீங்கியே விழித்தல் போலே
நிகழ்த்திடும் பிறப்பாம் என்று
ஓங்கிய குறட்பா சொல்லும்
ஓடிவதேன் இறப்புக் கென்றும்
பாங்கரில் உமையோ டாடும்
பரன்செயல் உலக வாழ்வே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவழி

* வயிரமுத்து + *சின்னம்மா
  - தங்கமுத்து
  - சுப்பையா
  - ***சின்னப்பா**

* *சின்னையா + *நாகமுத்து
  - ***தவமணி**
  - சுப்பிரமணியம்

***சின்னப்பா** + ***தவமணி**

- ஆனந்தராசா (சுவிஸ்) + புவனேஸ்வரி (சுவிஸ்)
  - கோபிகிருஸ்ணா (சுவிஸ்)
  - யாழினி (சுவிஸ்)
  - யாமினி (சுவிஸ்)
- நகுலேஸ்வரன் (யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி) + புஸ்பராணி (ஆசிரியர் யா/கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி)
  - கவிப்பிரியா (மாணவி)
  - சங்கீதன் (மாணவன்)
  - கானப்பிரியா (மாணவி)
- பரமேஸ்வரன் (அதிபர் யா/தனங்கிளப்பு அ.த.க.பா) + கமலராணி
  - விபுஷா + சுதர்சன் (அவுஸ்ரேலியா)
    - வினோஜிகா (மாணவி)
- மகேஸ்வரன் (லண்டன்) + விஜயலதா (லண்டன்)
  - டினேஷ் (லண்டன்)
  - லதுஷா (லண்டன்)
  - இஷானிகா (லண்டன்)

* அமரர்களைக்குறிக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவில்கின்றோம்

எங்கள் குடும்பத்தலைவனைப்பிரிந்து, ஏங்கித் துடித்து, நாம் இடர் சுமந்த வேளையிலே, ஓடோடி வந்து உதவிகள் பல புரிந்தும், தொலைபேசிகள் மூலமும், தபால் மூலமும், கண்ணீர் அஞ்சலிகள் மூலமும், வேறுவழிகளிலும் ஆறுதல்கூறியும், அனுதாபம் தெரிவித்தும், எமது துயரைப் பகிர்ந்து கொண்ட அன்பர்கள், நண்பர்கள், உறவினர்கள், கல்விமான்கள், கல்வி அதிகாரிகள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்களுக்கும், இறுதிக்கிரியைகளை நடாத்தி வைத்த சமயப் பெரியார்களுக்கும் கலந்து கொண்ட ஏனைய சகலருக்கும், இம்மலரை அழகுற வடிவமைத்து அச்சிட்டுத் தந்த திருக்கணித பதிப்பகத்தினருக்கும் தொடர்ந்து ஒருமாத காலமாக மதிய உணவு மற்றும் சிற்றுண்டிகள் தந்து உதவிய உத்தமர்களுக்கும் எமது உள்ளம் கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நன்றி

தாமோதரம்பிள்ளை வீதி,
சங்கத்தானை
**சாவகச்சேரி.**

இங்ஙனம்
**குடும்பத்தினர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**திருமதி அ. வேதநாயகம் அவர்களுடன்...**
(முன்னாள் கல்விப்பணிப்பாளர்,தென்மராட்சி கல்வி வலயம்)




**திரு. அ. பிறேம்சங்கர் அவர்களுடன்...**
(முன்னாள் நீதிபதி, சாவகச்சேரி நீதிமன்றம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**பேராசிரியர் எஸ். சிவலிங்கராசா அவர்களுடன்...**

(தமிழ்த்துறை, யாழ்பல்கலைக்கழகம்)



**திரு. கி. கந்தவேள் அவர்களுடன்...**

(இணைப்பாளர், திறந்த பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



செல்வி றஞ்சனா நவரத்தினம் அவர்களுடன்...
(உதவிப்பிரதேச செயலர், தென்மராட்சி பிரதேச செயலகம்)



திருமதி றஞ்சினி ரகுநாதன் அவர்களுடன்...
(பிரதி திட்ட பணிப்பாளர், தென்மராட்சி பிரதேச செயலகம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**திரு. சுப்பையா சண்முகரட்ணம் அவர்களுடன்...**
(முன்னாள் பிரதம கணக்காளர், மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்)



**திருமதி உஷா சுபலிங்கம் அவர்களுடன்...**
(பணிப்பாளர், பண்பாட்டலுவல்கள் திணைக்களம், யாழ்ப்பாணம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**திரு. கு. சிவானந்தன் அவர்களுடன்...**
(முன்னாள் கோட்டக்கல்வி அதிகாரி, தென்மராட்சி கல்வி வலயம் சாவகச்சேரி)



**திரு. சு. கிருஷ்ணகுமார் அவர்களுடன்...**
(கல்விப்பணிப்பாளர், தென்மராட்சி கல்வி வலயம் சாவகச்சேரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**திரு. கே. கனகேஸ்வரன் அவர்களுடன்...**
(முன்னாள் ஆணையாளர், தொழில்திணைக்களம் யாழ்ப்பாணம்)



**திரு. எஸ். ஸ்ரீநிவாசன் அவர்களுடன்...**
(முன்னாள் பிரதேசசெயலர், தென்மராட்சி பிரதேச செயலகம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்



எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையது எதை இழந்தாய்
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்?
அதை நீ இழப்பதற்கு.
எதை நீ படைத்திருக்கிறாய்
அது வீணாகுவதற்கு.
எதை நீ எடுத்துக் கொண்டாயோ
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ
அது நாளை மற்றொருவருடையதாகிறது.
மற்றொருநாள் அது வேறொருவருடையதாகும்.
இதுவே உலக நியதியும்.
எனது படைப்பின் சாராம்சமுமாகும்.

-பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org